**CC 251/2022**

**எதிரி ஆஜர்.**

அ**.**சா**.1** முருகேசன் த/பெ**.** காந்தி **(**எ**)** கணேசன் மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் கரூர் இபி ஆபிஸ் மேல்புறம் காய்கடை வைத்துள்ளேன். எனது அம்மா ஆடு வைத்து வளர்த்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்ததைப் பற்றி கேள்விப்பட்டு தான் எனக்கு தெரியும். விபத்து நடந்தவுடன் தகவல் கேள்விப்பட்டு நான் தான் ஆம்புலன்சில் எனது அம்மாவை ஏற்றிவிட்டேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. நான் தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுக்க சென்றபோது என்னுடன் எனது மனைவி, சிங்காரவேலு, விக்னேஷ், ஜனார்தனன் ஆகியோர் உடனிருந்தனர். அப்போது எனது மனைவி மட்டும் காவல் நிலையத்திற்கு வெளியில் இருந்தார். மற்றவர்கள் அனைவரும் சென்று காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். சுமார் 11.00 மணியளவில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். இந்த விபத்து சம்மந்தமாக இழப்பீடு பெற தனியாக மனு தாக்கல் செய்யப்பட்டு விபத்திற்குண்டான இழப்பீடு பெற்றுக்கொண்டோம். நான் முதல் விசாரணையிலும் மற்றும் 161 ஸ்டேட்மெண்டிலும் சொல்லியுள்ளது போல் தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பின்னிட்டு, போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் EX.P1 புகார் நான் எழுதவில்லை. கையெழுத்து மட்டும் தான் செய்தேன். புகாரை எழுதியது எனது மகனின் நண்பராவார். இந்த விபத்திற்கு காரணம் என்னுடைய அம்மாதான் இழப்பீடு பெறுவதற்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

**CC 251/2022**

## எதிரி ஆஜர்.

அ**.**சா**.2** சிங்காரவேல் த/பெ**.** ஆறுமுகம் மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் ஆம்புலன்ஸ் ஐஸ் பாக்ஸ் வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் இபி ஆபிஸ் எதிர்புறம் கடை வைத்துள்ளேன். நான் கோவை ரோட்டில் உள்ள டீகடையில் டீ குடித்துக் கொண்டிருந்தேன். சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் சுமார் 10, 15 நபர்கள் இருந்தார்கள். ரங்கநாயகிபுரம் ரோட்டில் நுழைவாயில் வேகத்தடை உள்ளது. விபத்து சமயத்தில் கண்ணாத்தாள் முன்பு செல்ல அவருக்கு பின்னால் இறந்துபோன காளியம்மாள் வந்து கொண்டிருந்தார். விபத்துக்குண்டான லாரி தெற்கிலிருந்து வடக்கு வந்து மேற்கே திரும்பும்போது விபத்து ஏற்பட்டது. இறந்துபோன காளியம்மாள் லாரியின் முன்பக்கம் மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார். விபத்து ஏற்பட்ட பின்னர் சத்தம் கேட்டுதான் நான் சென்று பார்த்தேன். விபத்து ஏற்படுத்திய லாரி தெற்கிலிருந்து வடக்கு வந்து மேற்கே திரும்பியதால் யார் மீது தவறு என்று குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை என்றால் சரிதான். சாட்சி சொன்ன அ.சா.1 முருகேசன் 7,8 மாதங்களாக தெரியும். அவர் எனக்கு சொந்தமா என்றால் இல்லை. விபத்தான பின்னர் அடிபட்ட நபரை நான் ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பவில்லை. யார் கூட சென்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் புகார் கொடுக்க முருகேசனுடன் செல்லவில்லை. நான் தற்போது சொன்னவாறுதான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறுதான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் அ.சா.1 முருகேசனுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சி ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

**CC 251/2022**

## எதிரி ஆஜர்.

அ**.**சா**.3** கண்ணாத்தாள் க/பெ**.** முருகேசன் மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். விபத்து சமயத்தில் நான் வீட்டிலிருந்தேன். எனது மாமியார் ஆடு வைத்திருந்தார். இந்த விபத்து சம்மந்தமாக இழப்பீடு கோரி மனு செய்து இழப்பீடு தொகையை பெற்றுக்கொண்டோம். விபத்திற்குண்டான லாரி தெற்கிலிருந்து வடக்கு வந்து மேற்கே திரும்பியது. லாரியின் முன்பக்கம் எனது மாமியார் மீது மோதியது. நான் வீட்டிலிருந்தபோதே எனது மாமியார் வந்துவிட்டார். நான் பின்னாடி கிளம்பினேன். ஒரு அரை பர்லாங் தூரம் இருக்கும். திடீரென்று எனது மாமியாரை காணவில்லை. கும்பலாக இருந்தது சென்று பார்த்தபோது மாமியார் கீழே கிடந்தார். லாரியை ஓட்டிவந்த ஓட்டுநர் இல்லை. ஆம்புலன்சில் அக்கம் பக்கம் இருந்தவர்கள் ஏற்றிவிட்டார்கள். அப்போது எனது கணவர் கடையிலிருந்தார். நான் சொல்லியுள்ளவாறுதான் முதல் விசாரணையிலும், 161 வாக்குமூலத்திலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ரங்கநாயகிபுரம் அண்ணாநகர் மெயின்ரோடு நுழைவுவாயிலில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். கோலை மெயின் ரோட்டில் சேகர் அன்கோ முன்புறம் நடைபாதை உள்ளது என்றால் சரிதான். எனது மாமியார் நடைபாதையில் வரவில்லை ரோட்டில் தான் நடந்து வந்தார். நான் புகார் கொடுக்க காவல் நிலையம் செல்லவில்லை. யார் புகார் கொடுத்தார்கள் என்பது எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. இறந்துபோனவர் எனது மாமியார் என்பதால் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரில்ல. நான் சம்பவ இடத்திலும் இல்லை, நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது சாட்சி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

**CC 251/2022**

## எதிரி ஆஜர்.

அ**.**சா**.4** விக்னேஷ் த/பெ**.** ராதாகிருஷ்ணன் மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

சாட்சி சொன்ன அ.சா.1 முருகேசன், மற்றும் அ.சா.3 கண்ணாத்தாள் ஆகியோர் எனது நண்பரின் பெற்றோர்கள் ஆவார்கள். விபத்திற்கு பின்னிட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுக்க நானும், அ.சா.1 முருகேசன், ஜனார்தனன், சிங்கார வேல் ஆகியோர் சென்றோம். போலிசிடம் எத்தனை கையெழுத்துகள் போட்டேன் என்று ஞாபகம் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் வரைபடத்திற்கு கீழ் அல்லது எழுதியதற்கு கீழ் கையெழுத்து போட்டேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. சுமார் மாலை 4,5 மணிக்கு கையெழுத்து போட்டேன். நான் சென்றபோது சம்பவ இடத்தில் சுமார் 20,30 பேர் இருந்தார்கள். நான் சொல்வதைப்போல் தான் எனது முதல் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.